# தமிழ்ச்சிட்டு

விடை 2033
[ மே - 2002 ]



விலை :
உரு. 3.00
குரல் 25
இசை 5

சிறுவர்
கலை
இலக்கியத்
திங்களிதழ்

## இந்தியன் என்றால் என்னது தம்பி ?

சாதியும் இருக்கும்;
மதமும் இருக்கும்;
சாத்திரம் மக்களை
வேறெனப் பிரிக்கும்!

மோதலும் இருக்கும்;
முதலாளி இருப்பான்;
முன்னேற்றம் சிலர்க்கே
வாய்ப்பாக இருக்கும்!

குந்தியே தின்பான்
ஒருவன்; மற்றவன்
குடல்வற்றிச் சாவான்;
இவற்றிடை யாவரும்

இந்தியன் என்றால்
என்னது தம்பி?
எல்லாரும் சமமென்றால்
எப்படி தம்பி?

கொள்ளையன் ஆள்வான்;
கொடுமைகள் செய்வான்;
கொடுக்கும் உரிமைகள்
கொடாது தடுப்பான்!

வெள்ளையன் ஆண்டதும்
வெறியர் ஆள்வதும்
வேறுபா டின்றி
விளங்கிடும் தம்பி!

முந்திய ஆட்சியை
அடிமைஎன் றார்கள்!
முன்னினும் இவர்கள்
அடிமைசெய் தார்கள்!

இந்தியன் என்றால்
என்னது தம்பி?
எல்லாரும் சமமென்றால்
எப்படி தம்பி?

-1988

— பாவலரேறு பெருஞ்சித்திரனார் —

---


# தமிழ்ச்சிட்டு

கட்டண விளக்கம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 36.00 | 200.00 |
| தனியிதழ் | 3.00 | |
| வாழ்நாள் கட்டணம் | 350.00 | |

**தமிழ்ச்சிட்டு (சிறுவர் கலை இதழ்)**
செந்தமிழ் அடுக்ககம், மேடவாக்கம் கூட்டுச் சாலை,
சென்னை - 601 302. தொலைபேசி : 227 0231.

தமிழ்ச்சிட்டு

சிறுவர் கலை இதழ்

குரல்–25 இசை–5

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு

நிறுவனர்:
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
**தாமரை பெருஞ்சித்திரனார்**

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**'தமிழ்ச்சிட்டு'**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை– 601 302.
தொலைபேசி எண் : 227 0231

## நட்பு.

மாந்த உறவுகளில் மேலோங்கிய உறவு நட்பே ஆகும்.

ஆனால் எல்லாருடைய நட்பையும் இது மிகவும் சிறந்தது என்று எளிதே சொல்லிவிட முடியாது.

ஒவ்வொருவரும் அவரவரின் இன்ப, துன்பங்களை எல்லாம் நண்பர்களிடையே பகிர்ந்து கொள்கின்றனர்.

எனவே நட்பு என்பது மிக நெருங்கிய உறவாக அமைகிறது.

எனவேதான் திருவள்ளுவரும் ஐந்து அதிகாரங்களில் நட்பைப் பற்றி விளக்கமாக எழுதியிருக்கிறார்கள்.

நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு இந்த அதிகாரங்களில் முழுக்க முழுக்க நட்பைப் பற்றியே திருவள்ளுவர் விளக்கப்படுத்தியிருக்கிறார்.

நல்ல நண்பர் ஒருவரை ஆய்ந்து ஆய்ந்து தேர்வு செய்யவேண்டும் என்கிறார்.

"உன் நண்பன் யார் என்று நீ எனக்குச் சொல்; நீ யார் என்பதை நான் உனக்குச் சொல்லுகிறேன்" என ஆங்கிலத்தில் ஒரு பழமை உண்டு.

ஆக, ஒருவருடைய பண்பையும், அறிவையும், செயலையும் ஆராய வேண்டுமெனில், அவர் எவருடனெல்லாம் ஈடுபாட்டுடன் இருக்கிறார் என்பதிலிருந்து ஆய்ந்து கொள்ளலாம்.

நட்பு சரியானபடி அமையவில்லை யானால், நட்பே பகைமையாகப் போய்விடும்.

அதைத்தான் நம் பாவலரேறு ஐயா அவர்கள் "பகைவன் என்போன் பழகி யிருந்தவன்" என்று தெளிவுபடுத்தினார்கள்.

உள்ளததில் அழுக்குள்ளவனாக இருப்பவன்தான் பிற்காலத்தில் பகைப்பவனாக மாறிப் போகிறான்.

திரைப்படம் பார்ப்பதற்கும், கூடி கைகொட்டிச் சிரிப்பதற்கும் நட்பு தேவையில்லை.

நட்பு என்பது உள்ளம் பொருந்தி மகிழ்வது, அறிவும் பண்பும் இணைந்து மகிழ்வது.

எனவே நட்பை ஆராய்ந்து நாம் மேற்கொள்ளல் வேண்டும்.

அதுவே நாம் வாழ்நாள் முழுக்க நம்மை நல்லபடி வாழ்விக்கும்.

*

# வட கடல்

ஐரோப்பாக் கண்டத்தில் நார்வே, தென்மார்க்கு, செருமனி, நெதர்லாந்து, பெல்சியம் ஆகிய நாடுகளுக்கும் இங்கிலாந்து தீவுகளுக்குமிடையே இருப்பது வட கடல். இது அட்டுலான்டிக்குப் பெருங் கடலின் ஒரு பிரிவு. ஒரு காலத்தில் இப்பகுதி நிலமாக இருந்ததென்றும், தாழ்வான இப்பகுதியில் அட்டுலான்டிக்குக் கடலின் நீர் புகுந்து கடலாக மாறியது என்றும் கூறுகின்றனர்.

கப்பல் போக்குவரத்துக்கு இக்கடல் மிகவும் உதவியாக உள்ளது. இதன் காரணமாகப் பல பெரிய துறைமுகங்கள் உருவாகியுள்ளன. இலண்டன், கல், ஆன்ட்டுவெர்ப்பு, இராட்டர்டாம், காம்பர்க்கு முதலியன இவற்றுள் முகாமையானவை.

வட கடல் ஆழமில்லாதது. இதில் பல ஆறுகள் கலப்பதால் நீர் அதிகமாக உப்புக் கரிப்பது இல்லை. இக்கடலில் மீன்கள் அதிகமாகக் கிடைக்கின்றன.

*


# முதுகுத் தண்டுள்ள உயிரினங்கள்

முதுகுத் தண்டுள்ள உயிரினங்களில், முதுகுப் பக்கத்தில் பல நரம்பணுக்களாலான ஒரு நரம்பு நாண் காணப்படும். இது உள்ளே குழலாக இருக்கும். இதுவே குழலுடைய முதுகுப் பக்க நரம்புத்தண்டு எனப்படுவதாகும். இந்த நரம்புத்தண்டுதான் பின்னர் முதுகெலும்புள்ள உயிரினங்களில் மூளையாகவும், தண்டுவடமாகவும் மாற்றமடைகிறது.

முதுகுத் தண்டுள்ள உயிரினங்களில் நான்கு பிரிவுகள் உண்டு. இவ்வுயிரினங்களில் சிலவற்றிற்குத் தலைப்பிரட்டை நிலையில் முதுகுத்தண்டும், குழலுடைய முதுகுப்பக்க நரம்புத் தண்டும் வாலில் அமைந்திருக்கும். பின்னர் மறைந்துவிடும். இவை 'வால்தண்டு உயிரினங்கள்' எனப்படும். கடல்பீச்சி என்னும் உயிரினம் இப்பிரிவைச் சேர்ந்தது.

மஞ்சள்புழு போன்றவற்றுக்கு முதுகுத் தண்டு உடலின் முன்பகுதியில் மட்டும் குட்டையாகக் காணப்படும். இதன் முதுகுப் பக்க நரம்புத்தண்டு, காறைப்பட்டி பாகத்தில் உள்ளே குழலாக இருக்கும். இவற்றை 'அரைத் தண்டு உயிரினங்கள்' என்பார்கள்.

இன்னும் சில உயிரினங்களில் தலையின் முன்முனையிலிருந்து பின்முனை வரை முதுகுத்தண்டு நீண்டிருக்கும். இவற்றில் தலை எலும்புக்குரிய தெளிவான



முதுகுத் தண்டுள்ள உயிரினங்கள்


அடையாளங்கள் இருப்பினும், முழுமையான மண்டை ஓடு எனச் சொல்லத்தக்க வகையில் ஏதுமிராது. இவற்றுக்கு முதுகுத் தண்டு வாழ்நாள் முழுதும் இருக்கும். தாடை எலும்புகள், குருத்தெலும்புகள் இல்லை. மூளைக் குழாயுடன் இணைந்த தண்டுவடம் உண்டு. இவற்றுக்கு தலைத் தண்டு உயிரினங்கள்

என்று பெயர். ஒரு வகைக் கடல் விலங்கு இவ்வகையைச் சேர்ந்தது.

உடலின் பாகங்களை இணைத்துத் தாங்கிக் காப்பாற்றக் கூடிய கூடு மண்டை ஓடு, முதுகுத்தண்டு, தண்டு வடம் முதலியவை உடைய உயிரினங்கள் 'முதுகெலும்புள்ள உயிரினங்கள்' எனப்படும். மாந்தன் இப்பிரிவைச் சேர்ந்தவன். மற்றும் பாலூட்டிகள் பறவை, பல்லி, தவளை, மீன் முதலியனவும் இதில் அடங்கும்.

## முதுகெலும்பில்லா உயிரினங்கள்

உலகில் ஏறத்தாழ பத்து இலக்கம் உயிரினங்கள் உள்ளன. இவற்றுள் ஏறத்தாழ எட்டு இலக்கம் இனங்கள் முதுகெலும்பில்லாதவை.


முதுகெலும்பில்லா உயிரினங்கள்

முதுகெலும்பில்லா உயிரினங்களைப் பல தொகுதிகளாகப் பகுத்துள்ளனர்.

முதுகெலும்பில்லா உயிரினங்களில் பெரும்பாலானவற்றால் தீமையே உண்டாகிறது. அவற்றில் சில வகைப் புழுக்கள் நோய்களை உண்டாக்குகின்றன. பூச்சிகள் நோய்களைப் பரப்புகின்றன; நமது உடைமைகளை வீணாக்கு கின்றன. வண்டுகள் உணவுப் பொருள்களைத் துளைத்து வீணாக்குகின்றன. நமக்கு உதவி யாக இருக்கும் முதுகெலும்பில்லா உயிரினங்கள் சிலவும் உண்டு. பட்டுப் பூச்சிகளிலிருந்து பட்டுக் கிடைக்கிறது. தேனீக்கள் தேன் தருகின்றன. நண்டு, இறால் போன்றவை உணவாகின்றன. முத்துச் சிப்பிகளிலிருந்து முத்து எடுக்கிறோம். சங்குகள் ஊதுவதற்கும், அணிகலன்கள் செய்வதற்கும் பயன்படுகின்றன. அரக்கு, மெழுகு, வண்ணப் பொடிகள் முதலியன சிலவகைப் பூச்சிகளால் கிடைக்கின்றன.


## முதுகெலும்புள்ள உயிரினங்கள்

முதுகெலும்புள்ள உயிரினங்கள் அனைத்துக்கும்

உடலின் இடப்பகுதியும், வலப்பகுதியும் ஒரே சீராக அமைந்துள்ளன. இவற்றுக்கு முதுகெலும்பு உடலைத் தாங்கும் சட்டமாகப் பயன்படுகிறது.

இவற்றுக்கு முதுகுத் தண்டு ஒன்று உண்டு. இதை அடித்தளமாகக் கொண்டுதான் பின்னர் முதுகெலும்பு வளர்ச்சியடைகிறது.

தண்டுவடம் எனப்படும் நீண்ட நரம்புவடம் ஒன்றும் இந்த உயிரினங்களில் காணப்படும். அது மூளையுடன் இணைக்கப் பட்டிருக்கும். அதை முதுகெலும்பு பாதுகாக்கிறது. தண்டுவடத்தின் வெளிமுனையில் மூளை வளர்ச்சியடைகிறது. மூளையைப் பாதுகாக்கும் கூடாக மண்டையோடு உருவாகிறது. இம் மண்டையோடு முதுகெலும்பின் மேல் முனையுடன் பிணைக்கப் பட்டிக்கும். பெரும்பாலான முதுகெலும்பு உயிரினங்களில் ஒன்றுக்கொன்று இணையாக இரண்டு துணையுறுப்புகள் உண்டாகின்றன. இத் துணை யுறுப்புகள் மீன்களில் நீந்த உதவும் துடுப்புகளாக மாறுகின்றன. பெரும்பாலான நீர்நிலம் வாழ் உயிரினங்களிலும், ஊர்ந்து செல்லும் உயிரினங்களிலும், பாலூட்டிகளிலும் இவை முன்னங் கால்களாகவும் பின்னங் கால்க ளாகவும் உருப்பெறுகின்றன. பறவைகளில் இறகுகளாகின்றன. மாந்தனுக்குக் கைகளாக மாறுகின்றன.




முதுகெலும்புள்ள உயிரினங்கள் யாவும் முதுகுத் தண்டுள்ள உயிரினங்கள் என்னும் தொகுதியில் ஒரு பிரிவேயாகும். இவற்றில் ஏறத்தாழ 70,000 வகைகள் உண்டு. இவற்றை ஐந்து பெரும் வகுப்புகளாகப் பகுப்பார்கள். அவை மீன்கள், நீர்நிலம் வாழ்வன, ஊர்வன, பறவைகள், பாலூட்டிகள் என்பன. பாலூட்டி வகுப்பைச் சேர்ந்த முதுகெலும்பு விலங்கே மாந்தனாவான்.

*

# தெரிக்கக் காஞ்சம் சய்திகள்

❒ வானூர்தியில் செல்லும் போது வானவில் வட்டமாகத் தெரியும்.


❒ ஏழு எலும்புகளாலான பதுங்கு குழியில் மிகப் பாதுகாப்பாக இருக்கும் உறுப்பு மாந்தனின் கண்.

❒ உலகில் தனக்கெனத் தனிமொழி இல்லாத நாடு சுவிட்சர்லாந்து.

❒ "எனக்குக் குருதி கொடுங்கள். உங்களுக்கு விடுதலை அளிக்கிறேன்" என்ற வரிக்குரியவர் சுபாசு சந்திர போசு.

❒ பிறந்த குழந்தைக்கு 300 எலும்புகள் இருக்கும்.

❒ உலகில் மதமாற்றத்தைத் தடை செய்துள்ள நாடு இந்து மதம் பேணும் நேபாளம்.




❒ ஆண் யானைக்கு மட்டுந் தான் மதம் பிடிக்கும்.

❒ தவளைகளில் கத்துவது ஆண் தவளை.

❒ கரப்பான் பூச்சியில் பறப்பது ஆண் கரப்பான் பூச்சி.

❒ கொசுவுக்குப் பிடிக்காத



வண்ணம் வெள்ளை, மஞ்சள்.

❒ வரிக்குதிரை மேலுள்ள கோடு வெள்ளை.

❒ வாய் இல்லாத பூச்சி யினம் வண்ணத்துப்பூச்சி.

❒ தலை இல்லாது வாழும் நீர் வாழினம் நண்டு.

❒ இனிப்பு சுவையை அறிய முடியாத விலங்கு பூனை.

❒ கழுத்து இல்லாத உயிரினம் தவளை.

❒ சருக்கரை நீரில் முட்டை மூழ்காது.

❒ யானை வணங்கி என்றழைக்கப்படும் செடி நெருஞ்சில்.

❒ அரசக்கனி என்றழைக் கப்படுவது நெல்லிக்கனி.

❒ கதிரவனில் இருந்துவரும் புற ஊதாக் கதிர்களால் தோல் புற்று நோய் மாந்தனுக்கு ஏற்படுகிறது.

❒ குறிஞ்சிப் பாட்டில் கூறப்பட்டுள்ள பூக்கள் 99. இன்று இருப்பது எத்தனை?

❒ இருள்நாறி என்ற மலரின் இன்றைய பெயர் இருவாட்சி.

❒ முகில் பகலில் விரைவாக நகரும்.

❒ கண்களைத் திறந்தபடி நம்மால் தும்ம முடியாது.

❒ உடல் வலியை உணர்த்தும் மூளை தன்வலியை அறியாது.

❒ நம் உடல் முழுவதும் குருதி சுற்றி வர மூன்று நிமையம் ஆகும்.

❒ பெண்களுக்குக் கட்டாயக் கல்வி வழங்கும் நாடு பிரிட்டன்.

❒ புதுச்சேரி - பிரெஞ்சு ஆட்சியின் கீழ் இருந்தபோதும், பிரெஞ்சு மொழி தவிரப் பிறப்பு, இறப்பு சான்றிதழ் தமிழ் மொழியிலும் எழுதித் தரப்பட்டது.

❒ பிரெஞ்சு ஆட்சியிலும் ஆனந்தரங்கர் தமிழில் கையொப்பமிட்டார்.

❒ புதுச்சேரி எனும் பெயர் கி.பி. 1553ஆம் ஆண்டு முதல் வழக்கத்தில் இருந்து வருகிறது.

❒ கி.பி. 1746இல் சென்னைக்கும் புதுச்சேரிக்கும் இடையில் அஞ்சல்கள் ஏட்டகத்தின் மூலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

❒ முதன்முதலில் தமிழில் வெளிவந்த மாத வெளியீடு– தமிழ்த்தாள்.

*

# ‘விடுதலை’

## எனும் பெயரில் ஒரு நாடு.

ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையிலுள்ள ஒரு குடியரசு நாடு இலைபீரியா. இந் நாட்டின் பரப்பு 111,369 சதுர அயிர மாத்திரி. மக்கள் தொகை ஏறத்தாழ 19 இலக்கம் (1981).


நாட்டின் நடுப்பகுதி மலைப்பாங்கான சமவெளி. நிலநடுக்கோட்டுக்கு அருகிலிருப்பதால் இந் நாட்டில் வெப்பம் அதிகம். மழையும் மிகுதியாகப் பெய்கிறது. அடர்ந்த காடுகள் வளர்ந்துள்ளன.

இந்நாட்டில் தொய்வம் (இரப்பர்) பெருமளவில் பயிரிடப்படுகிறது. முகாமை ஏற்றுமதிப் பொருள்களுள் தொய்வமும் ஒன்று. குளம்பி, கோக்கோ, வாழை முதலியன மற்ற விளைபொருள்கள். இரும்புத் தாது ஏராளமாக வெட்டியெடுக்கப்படுகிறது. வெளிநாடுகளுக்கு இதனை ஏற்றுமதி செய்கின்றனர். வயிரம், தங்கம் முதலியனவும் கிடைக்கின்றன.

மக்கள் அனைவரும் நீக்கரோக்களாவர். பெரும்பாலோர் கிறித்தவச் சமயத்தைச் சார்ந்தவர்கள். மொழி ஆங்கிலம். தலைநகரம் மன்ரோவியா. இது ஒரு சிறந்த துறைமுகம்.

அமெரிக்காவில் அடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்ட நீக்கரோ மக்களுக்காக 1822இல் இந்நாடு உருவாக்கப்பட்டது. 1847இல் ஏறத்தாழ 3,000 நீக்கரோக்கள் இங்கு குடியேறினர்.

இலத்தீன் மொழியில்



‘விடுதலை’ என்று பொருள்படும் ‘லைபீரியா்’ என்ற சொல்லே இந் நாட்டின் பெயராயிற்று. பிறகு இந்நாடு ஒரு குடியரசாக மாறியது. அன்று குடியேறிய நீக்கரோ மக்களின் வழிமுறையினர் இன்று ஏறத்தாழ 20,000 பேர் உள்ளனர். நாட்டின் ஆட்சிப் பொறுப்பு பெரும்பாலும் இன்று இவர்களுடையதுதான்.

# இயற்கைச் சுழற்சிக்கு இடர்

இயற்கையமைப்பு நிலையாக இயங்குவதற்குச் சுழற்சி இயக்கம் பயன்படுகிறது. மண்ணில் வளரும் செடி கொடி மரங்கள் தம்மினத்தைப் பெருக்குவதற்கு வித்துகளைத் தூவுகின்றன. பழுத்த இலைகள் மண்ணில் வீழ்ந்து சருகாகி மழையில் ஈரத்தில் மட்கி அந்த வித்துகளுக்கே உரமாகிறது. எனவே எல்லாக் கழிவுப் பொருள்களும் சுழற்சி முறையில் இயற்கையமைப்பில் பயன்படுத்தப் படுகிறது.

காடுகளில் மரங்களை வெட்டுவதன் மூலம் நீர் சுழற்சி குன்றுகிறது. மழைவளம் குறைகிறது. நாளடைவில் வளமிகுந்த காடுகளும் பாலையாகி விடுகிறது.

மக்கள் அன்றாட வாழ்வில் ஏற்படும் குப்பைகளையும் கழிவுகளையும் சுழற்சி செய்து கொள்ளவும் மீட்டுருவாக்கம் செய்து கொள்ளவும் வழியமைத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் சுற்றுப்புறச் சூழலையும் கெடுத்துக் கொண்டு இயற்கை யமைப்புக்கும் தாக்கம் விளைவித்துக் கடைசியில் மக்கள் தேவைக்கு இல்லாமல் எதிர்கால மக்களினத்திற்கே எதிரியாகி விடுவோம்.

குப்பைக் கழிவுகளை இருவகையாகப் பிரிக்கலாம். உயிருள்ள கழிவு, உயிரற்ற கழிவு. அன்றாடம் வீட்டில் உருவாகும் கழிவுப் பொருள்களில் உயிருள்ள கழிவுப் பொருள்கள்தாம் மிகுந்துள்ளன. காய்கறித்தோல்கள், இலைச்சருகு, பழுத்த கீரைகள், வீணான தாள்கள் போன்ற மட்கக் கூடிய பொருள்கள் அனைத்தும் உயிருள்ளவை என்றே கொள்ளவேண்டும்.

நெகிழ்த்தாள் – உறைகள் – பொருள்கள் முதலியன மட்காத பொருள்கள் வேதிப்பொருட்கள் அனைத்தும் உயிரற்ற பெருள்கள் ஆகும்.

எந்தப் பெருள்களையும் எரிக்கும் முன் அவை உயிர் சுழற்சிப் பொருளா என்று கவனிக்கவேண்டும். உயிர் சுழற்சி

என்பது மண்ணில் மட்கக் கூடிய பொருளாகும். மண்ணில் மட்கக் கூடியது அனைத்தும் மறுபடியும் உரமாகியோ எந்த வகையிலோ இன்னொரு உயிர் வளர்ச்சிக்குப் பயனளிக்கக் கூடியதாக இருக்கும்.

அவ்வாறு அடுத்த உயிர்வளர்ச்சிக்குப்பயன் படாதவாறு சருகான இலைகளையும் வீணான கழிகட்டைகளையும் எரித்து விடுவதன் வழி நாம் எதிர்கால உயிர்வளர்ச்சியை மறைமுகமாகத் தடை செய்து விடுகிறோம்.

அது மட்டுமல்லாமல் வளி மண்டலத்தை மாசுள்ளதாகச் செய்து விடுகிறோம். அதன் இன்றைய காற்றில் உயிர்வளி அளவைக் குறைத்து விடுகிறோம். உயிர்வளி குறைவதன்வழி உயிரினங்களின் மூச்சுத் தொல்லைகளுக்கு வழி வகுக்கிறோம். புகைகளினால் கண்களுக்குக் கேட்டினை உருவாக்குகிறோம்.

அனைத்து விலங்கின மலக் கழிவும் உயிர் சுழற்சிப் பொருளே. அவற்றை மண்ணோடு மண்ணாக மட்குவதற்கு உரிய வகைகளைச் செய்தால் உரமாகவும் எதிர்காலத்தில் எரிபொருளாகவும் பயன்படும். எரிபொருளாகப் பயன்பட்டது போகவும் எச்சமானது எருவாகவே பயன்படும்.

இலைகளையும் சருகுகளையும் எரித்துவிடும் பழக்கம் நம்மிடம் உள்ளது. வீட்டு மரங்களிலிருந்து செடி கொடிகளிலிருந்தும் விழும் சருகுகளைக் கூட்டி நாம் எரித்துவிடுகிறோம். அவை குழிதோண்டி புதைத்து விட்டால் நாளடைவில் நல்ல எரு மண்ணாக தோட்டத்திற்குப் பயனித்து விடும்.

நாம் போடும் குப்பைகளை மாநகராட்சி வண்டிகளும் பொதுக் கழிப்பான இடத்தில் போட்டுக்குவித்து எரித்தும் விடுகின்றன. நெகிழிப் பொருள்களை எரிக்க வேண்டாம் என்று விளம்பரம் செய்யும் அரசு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மாநகராட்சி நகராட்சி ஊராட்சிகள் செய்யும் முறைகளுக்குத் தடைபோடவில்லை. நெகிழிப் பொருளை எரிப்பதால் அதில் உள்ள வேதிப்பொருள் எரியூட்டப்பட்டுப்

பல தீங்கான ஆவிகள் வெளியேறி மக்களின் உயிர்ப்புக் கருவிகளிடைச் சென்று பல கோளாறுகளை உண்டு பண்ணுகின்றன. அதேபோல் மட்கும் தன்மை வாய்ந்த பொருள்களும் எரியூட்டப்பட்டு விட்டால் இதுபோன்றே புகை வெளியேறி உயிர்வளி மண்டிலத்தைத் தாக்குவதுடன் அதன் உயிர்த்தன்மையையும் இழந்துவிடுகிறது.


உயிர்க்கழிவுப் பொருளை மண்ணின் புதைத்து விட்டால் அது நாளடைவில் உரமாக உரமுள்ள மண்ணாக மாறிவிடும். எனவே குப்பைக் கழிவுகளை இருபிரிவாகப் பிரித்துப் புதைப்பது நன்று. நெகிழி உறையில் குப்பைகளைப் போட்டு வாயை மூடிக் குப்பையில் போடுவதும் சரியான முறையன்று. உறைக்குள் உள்ள குப்பைகள் மட்குவதற்கு நிரம்ப நாட்கள் எடுக்கும் என்பதுடன் உள்ளே உள்ள இயற்கைப் பொருள்கள் கெட்டு வேறு விளைவையும் ஏற்படுத்தி விடலாம்.

எனவே இயற்கை இயங்குகிற அமைப்பைப் புரிந்து கெண்டு அதன் நிலைப் புத்தன்மைக்கு ஏற்பக் கழிவுப் பொருள்களை நாம் கையாண்டோமானால் இயற்கையமைப்புத் தொடர்ந்து காப்பாற்றவும் முடியும். நம் எதிர்கால உயிரின வாழ்க்கைக்கு இடையூறு செய்யாமலும் இருப்போம்.

## மட்குவதற்கு எடுத்துக்கொள்ளும் நாட்கள்

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைக் கழிவான காய்கறி, பழக்கழிவுகளும் பிறவும் | ஒருகிழமையிலிருந்து இருகிழமை வரை |
| 2. | தாள் | 10–30 நாட்கள் |
| 3. | துணிகள் | 2–5 திங்கள் |
| 4. | கட்டைகள் | 1–15 ஆண்டுகள் |
| 5. | அலமியம், ஈயம் போன்ற மாழைப் பொருள்கள் | 100 ஆண்டுகள் |
| 6. | நெகிழிப் பொருள்கள், உறைகள் | 10 இலக்கம் ஆண்டுகள் |

# பாவாணர் தாத்தாவோடு படம்பிடித்துக் கொள்ள போகிறேன்



தமிழ்ச்சிட்டுக்கு!

07.02.2002 அன்று பாவாணர் பிறந்த நாள்
தமிழ்ச்சிட்டு இதழில்
தமிழ்ச்சிட்டு ஒன்று
பாவாணரோடு மகிழ்ச்சியாக
எடுத்துக்கொண்ட
புகைப்படம்.

அறிவாளன் மட்டும்
பாவாணர் தாத்தாவோடு
படம்பிடித்துக் கொள்ள போகிறேன்
என்றான்... சரி என்றேன்.
அறிவாளனின் புன்னகையை
புகைப்படத்தில் காணலாம்

கு.அ. அறிவாளன்
மலர் வகுப்பு - தமிழ்வழிக் கல்வி
நாற்பது திருக்குறள் சொல்வான்
படிப்பில்... ஓவியத்தில் முதல் மாணவன்
பள்ளி நாடகத்தில் நடித்திருக்கிறான்.
புதுச்சேரி வானொலியில் பாடிய பாடல்
'புதிய கல்வி' இதழில் வெளிவந்திருக்கிறது.

# ஊன்பசை

ஊன்பசை மரம், தோல், தாள், துணி போன்றவற்றை ஒட்டுவதற்குப் பயன்படுகிறது. விலங்குகளின் தோல், எலும்பு, குருதி, பால் முதலியவற்றிலிருந்து ஊன்பசையை(வச்சிரத்தை) உருவாக்குகிறார்கள் இதைத் தூய்மையற்ற ஊன்பசை என்னும் சாரப் பொருள் எனலாம். கெட்டியான இப்பசையை நீரில் நீண்டநேரம் ஊறவைத்துப் பிறகு சூடாக்கிப் பயன்படுத்துவார்கள். சூடான வச்சிரத்திற்கு ஒட்டும் தன்மை அதிகம்.

விலங்குகளின் தோலைத் தூய்மையாக்கிக் கொதி கலத்திலிட்டுக் காய்ச்சினால் நீர்ம நிலையில் ஊன்பசை கிடைக்கும். எலும்பை நீர்த்த 'அமில'த்திலிட்டுக் கொழுப்பு முதலியவற்றை நீக்கிப் பிறகு பலமுறை நீரிற் கழுவி அமிலத்தை நீக்கவேண்டும். இவ்வாறு தூய்மை யாக்கிய எலும்பை நீரிலிட்டு நீராவியாயல் காய்ச்சி வடித்தால் நீர்மநிலையில் ஊன்பசை கிடைக்கும். அதை வெற்றிடத்தில் சுண்டக் காய்ச்சினால் பிசுபிசுப்புள்ளதாகிவிடும். ஊன்பசையை வெளுக்கக் கந்தக ஆவியைச் செலுத்துவர். பிறகு ஆழமற்ற தட்டுகளில் ஆற வைத்தால் கெட்டியான 'பசை' கிடைக்கும்.

தோல்பெட்டிகள், மரப் பொருள்கள் ஆகியவை செய்தல், புத்தகக் கட்டட வேலை, தீக்குச்சித் தொழில், பணம் அச்சிடும் தாள் செய்தல், மிதியடி செய்தல் போன்ற பலவகைத் தொழில்களில் ஊன்பசை பயன்படுகிறது.


**தமிழ்ச்சிட்டு**

பழைய படிகள்

**சலுகை விலையில்...**

**தமிழ்ச்சிட்டு**

பழைய படிகள்
மொத்தப் படிகள்
(சில இதழ்கள் விடுபாட்டுடன்)
5 தொகுப்புகளாக

உரு. 50/-

# அம்மா தாமரை பெருஞ்சித்திரனார்

பாவலர் இளஞ்சித்திரன்

எங்களுக் கெல்லாம் இனியவராம்;
இனிய பண்பில் பனியவராம்!
எங்களுக் கன்னை போலவராம்;
எந்தமிழ்த் தொண்டில் பாலவராம்!

பொன்னினை விரும்பிப் பார்த்ததில்லை;
புதுப்புதுப் பட்டைச் சேர்த்ததில்லை!
தென்னையைப் போல ஓங்கியவர்;
தென்மொழி யாரைத் தாங்கியவர்!

பிறர்போல் பகட்டை நினைத்ததில்லை;
பேச்சுக்க கும்அதை மதித்ததில்லை!
உறவாய் எம்மை நினைத்ததல்லால்
உயர்வாய் வேறு நினைத்ததில்லை!

தாமரை என்னும் பெயருடையார்;
தன்வளம் நினையா மனமுடையார்!
பாமழை பெருஞ்சித் திரனார்கை
பற்றிய மறத்தி! உரனுடையார்!

வறுமைக் கச்சப் பட்டதில்லை;
வாழக் கொள்கை கெட்டதில்லை!
சிறுமை எண்ணா துழன்றிருந்தார்!
செவ்வேள் வாழ்வில் கலந்திருந்தார்

சிறையவர்க் கெனினும் கவன்றதில்லை;
தெளிவு, வீரம் மறந்ததில்லை!
நிறைவுடன் மக்கள் புரந்திருந்தார்;
நேர்தென் மொழியை வளர்த்திருந்தார்!

குடும்ப விளக்கென் றாலிவர்தாம்!
கொள்கை விளக்கென் றாலிவர்தாம்!
கடுந்துன் பத்ததும் நிமிர்ந்தவராம்;
கணவரின் வழியில் திமிர்ந்தவராம்!

ஐயா வின்மெய்த் துணைநலமாம்!
அன்னை இவர்போல் எவருளராம்?
பொய்யா உரைப்பேன்; அவரருமை
புரிந்தவன்! பாடல் எனதுரிமை!

# மாந்தர்களை நம்பாதே

— சி. வெற்றிவேந்தன்

கிரீச்... கிரீச்... என்று செல்லமாகத் தாய்ச் சிட்டுக் குருவி அங்கே பறந்து வந்தது. அதைக் கண்டதும்... தன் அன்பால் அதன் குஞ்சுப் பறவைச் சிட்டுக் குருவி — மறு மொழியாகக் கிரீச்... கிரீச்... என்றது.

"அடேயப்பா... எவ்வளவு நாள் ஆயின உன்னைப் பார்த்து என்று தாய்ப் பறவை கூறிக் கொண்டே... "ஆமாம்... இந்தப் பெரிய மாளிகைக்கு எப்படி வந்தாய்? எனக் கேட்டது. இரண்டு அடுக்குமாடி வீட்டின் மேல் தட்டில் ஓர் அறையில் கண்ணாடியின் முன்னே இருந்த மிசையின் மேல் இன்பமாக அமர்ந்து... சிரித்துக் கொண்டே...

"அடடா... அதைக் கேட்கிறாயா அம்மா?"

ஆமாம்.. எப்படி மக்கள் வாழும் இந்த வீட்டிற்கு வந்தாய்?

"அம்மா! எங்களுக்கு இறக்கை முளைத்தவுடன் தனித்தனியே வாழுங்கள் எனப் பிரித்து வாழ விட்டார்கள். இரண்டு அண்ணனையும் ஒரு தங்கை யையும் விட்டு நான் தனியே வந்தேன். ஓர் அரச மரத்தில்தான் வாழ்ந்தேன். ஆனால் எனக்கு அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. அதனால் அப்படியே நீண்ட தூரம் பறந்து வந்தேன். கடைசியில் இந்த மாளிகையின் மேல் மாடியில் வந்து விழுந்தேன்".

"ஐயய்யோ" அப்புறம் நீ எப்படி உயிர் பிழைத்தாய்? எனப் பரிவுடன் தாய்ப் பறவை கேட்டது.

கொஞ்சம்... மயக்கந்தான்... அந்த நேரத்தில் ஒரு சிறுமி மேல் மாடிக்கு வந்தாள்... என்னை அப்படியே அன்போடு தூக்கிக் கொண்டு வந்து தண்ணீர் கொடுத்தாள். கண் விழித்துப் பார்த்தவுடன் மெதுவாக நீ அலகால் தடவுவது போல அவளும் என்னை அன்புடன் தடவிக் கொடுத்தாள்.

'செம்மொழி! செம்மொழி!!' என்று அவள் அம்மா குரல் கொடுத்தபோதுதான் தெரிந்தது அவள் பெயர் செம்மொழி என்று. பத்து அகவை இருக்கும். அச்சிறுமி எனக்கு நெல் மணிகள், தவசங்கள் (தானியங்கள்), பால், பழம் கொடுத்தாள். அவள் அன்பிலே நானும் இணைந்து அவளின் தோழியாகிவிட்டேன். அதி லிருந்து இங்கேதான் இருக் கிறேன். எனக்கு இங்கு இருப்பது நன்றாகத்தான் இருக் கிறது. அம்மா... என்று நீண்ட நேரமாகப் பேசியது.

அடிக்கடி என் இறக்கையை வெட்டுவான். செம்மொழி வந்து தடுப்பாள். அவன் என்ன சொல்லுவான் தெரியுமா? இறக்கை இருந்தா இது பறந்துபோய்விடும். அதுக்குப் பிறகு இது இங்கே இருக்காது எனச் சொல்லிக்கொண்டேயிருப்பான்.

''செம்மொழி தடுக்க மாட்டாளா?'' சொல்லிப் பார்ப்பாள். ஆனால் அந்தப் பையன் கேட்கமாட்டான்''. அப்படித் தான் பாரம்மா... என் இறக்கை இரண்டையும் நேற்று மறுபடியும் வெட்டி விட்டானம்மா! என்னதான் செம்மொழி என்னைச் செல்லமாக வைத்திருந்தாலும் இதை அவள் முழுமையாகத் தடுக்கவில்லையம்மா?

உம்... அப்படியா... என் கண்ணே! நான் சொல்வதைக் கேள். மக்கள் யாரையும் நம்பமாட்டாங்க. ஏன் அவர்களுக்குள்ளே அவர்களையும்கூட நம்பமாட்டாங்க. இயற்கையாக நீ கூடு கட்டி வாழ்ந்தா யார்வந்து உன்னைத் தடுக்கப் போகிறாங்க. என்னதான் அன்பாக, பாசமாக இருந்தாலும், உன் மேலே நம்பிக்கை வைக்கவில்லை பார்த்தாயா? இதுதான் மக்கள் (மனித) குணம்!

நாம் இறக்கை முளைத்தவுடன் பிரிந்து பிரிந்து வாழ்ந்தாலும் அன்புடன் குலவி வாழ்கின்றோறம். ஆனால் மக்கள் ஒன்றாக வாழ்வது போலக் காட்டினாலும் அவர்கள் அவர்களுக்குள்ளேயே நம்பிக்கை வைத்து வாழ்வது கிடையாது. அவர்களையே நம்பாத போது உன்னை மட்டும் எப்படி நம்புவார்கள்? இனியாவது நீ இதைப் புரிந்துகொள்ளடி...!

அம்மா! எனக்கு இந்தக் கண்ணாடி மாளிகை கிடைத்ததும், பாசமான தோழி கிடைத்தவுடன், என் இயல்பான வாழ்க்கையைக்கூட மறந்து விட்டேன். ஏன் கூடுகட்டு வதைக்கூட மறந்துவிட்டேன். ஆனால் நீ சொன்ன பிறகுதான் நம்பிக்கை வந்துவிட்டது. தன்னம்பிக்கை வந்துவிட்டது. என்னதான் ஏந்துகள்(வசதிகள்) இருந்தாலும் விடுதலையில்லாமல் இன்னொருவர் வீட்டில் வாழ்வது இழிவுதானம்மா! இழிவுதான்! இப்போ புரிந்துகொண்டேன் அம்மா! இனி என் விடுதலை வாழ்க்கையை எவரும் தடுக்க முடியாதம்மா? இறக்கை முளைக்க... முளைக்க... விடுதலைக் காற்றில் பறந்து விடுவேணம்மா... எவரும் தடுக்க முடியாது அம்மா!..... என்றது குஞ்சுப் பறவை புதிய உணர்வுடன்.

தாய்ப் பறவை மகிழ்ச்சியுடன் பறந்தது வானில்!

அதுசரி அம்மா.. அண்ணன்மார், பாப்பா எப்படி இருக்கிறார்கள்? பார்த்தாயா?

ஓ! அவர்களா... அவர்கள் நலமாகத்தான் உள்ளனர். அவர்கள் நான் சொன்னபடி கேட்டு ஊரை ஒட்டியுள்ள அரசமரத்தின் மேலே கூடு கட்டித் தனித்தனியே வாழ்ந்து வருகின்றனர். அதுவும் இயற்கையின் இன்ப வாழ்வில்! உம்... உங்க எல்லாரையும் திரும்பிப் பார்க்க வேண்டும் என்று எவ்வளவு நாள்கள் ஆசைப்பட்டேன் தெரியுமா? இந்த அம்மா ஆசை உங்களுக்குப் புரியுமா? அதனாலத் தான் திரும்பி ஒவ்வொருவரையா பார்த்துவிட்டு வருகிறேன். கடைசியில் உன்னைப் பார்த்தேன்.. இப்படி...?

எனக்கு என்னம்மா குறைச்சல்? வேளாவேளைக்குச் சாப்பாடு. கூண்டுக்குள்ளே வாழல... இந்த அறைக்குள்ளே சுற்றிச் சுற்றித் தான் வாழ்கிறேன். தோழியும் என்னை அன்பாக கவனிக்கிறாள். இதுக்கு மேலே என்ன வேண்டும்?



அப்படியா...? உன்னை யாரும் துன்புறுத்தவில்லையா? அதை ஏன் கேட்கிற அம்மா? இங்கு ஒரு தம்பி இருக்கிறான் செங்கண்ணன்னு பெயர். அவனுக்கு ஆறு அகவைதான் இருக்கும். அவன் அடிக்கடி நீண்ட ஈறு துடைப்பக் குச்சியின் (தென்னை மட்டையின் ஈறு) முனையால் சுருக்குப் போட்டு கழுத்திலிழுப்பான். உயிரே போகிற மாதிரியிருக்கும். அடிக்கடி 'லேசாக' அடிப்பான். அவன் வந்தாலே அச்சம்...! அப்புறம் வேறு என்ன செய்வான்?

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 645/2002
T.N. Cheif P.M.G. (NR) 645/2002 தமிழ்ச்சிட்டு

# இனவுணர்வு கொள்வோம்!

— தேன்மொழியருளி

எறும்பினத்தைப் பாருங்கள்!
எல்லாங்கூடிச் செல்லுமே!
திரிந்த மனம் உள்ளதா!
தெளிந்துநோக்கித் திருந்துவோம்! — நாம்
**தெளிந்துநோக்கித் திருந்துவோம்!**

கோழியினத்தைப் பாருங்கள்!
கும்பலாக மேயுமே!
தோழமையில் தோய்ந்துநாளும்
தொய்விலாது வாழுவோம்! — நாம்
**தொய்விலாது வாழுவோம்!**

காக்கைக் கூட்டம் பாருங்கள்!
கரைந்துயினத்தைக் கூடுமே!
ஆக்கமுள்ள இனஉணர்வை
அதன்வழியே கொள்ளுவோம்! — நாம்
**அதன்வழியே கொள்ளுவோம்!**

குரங்குகளை நோக்குங்கள்!
கூட்டமாகச் செல்லுமே!
உரமிழந்த நம்மினத்தை
உருப்படியாய்ப் பேணுவோம்! — நாம்
**உருப்படியாய்ப் பேணுவோம்!**

யானைக் கூட்டம் காணுங்கள்
யாவும் ஒன்றிச் செல்லுமே!
தேனைக் கூட்டும் ஈக்கள்போல்
தேசியத்தை நிறுவுவோம் — தமிழ்த்
**தேசியத்தை நிறுவுவோம்!**

*

உங்கள் ஊரில்
தமிழ்ச்சிட்டு கிடைக்கவில்லையா
உடனே
தொடர்புகொள்ளுங்கள்.